*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC. 211/2023***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-6 (LW-7)***

*Name / Father's Name:* ***திரு.விஜயகுமார் த/பெ. சுப்ரமணியம்***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **02.02.2026.**

துவக்க நேரம் 11.24 F.N

**1, 2 எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது ஆத்தூர், அரசு மருத்துவமனையில் உதவி அறுவை சிகிச்சை மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 26.01.2023 அன்று மதியம் 02.20 மணிக்கு நான் ஆத்தூர் அரசு மருத்துவமனையில் அவரச சிகிச்சை பிரிவில் பணியில் இருந்தபொழுது உலிபுரத்தை சேர்ந்த வெங்கட்ராமன்(55) என்பவர் சிகிச்சைக்கு வந்தார்.

2) வெங்கட்ராமனை விசாரித்தேன். அவர் கடந்த 26.01.2023 ம் தேதி காலை 11.00 மணியளவில் மூன்று அடையாளம் தெரிந்த நபர்கள், குச்சி மற்றும் மண்வெட்டியால் அவரது தலை, கழுத்து, இடதுதோள்பட்டை மற்றும் வயிறு ஆகிய பகுதிகளில் அடித்துவிட்டதாகவும், உடல் முழுவதும் வலி இருப்பதாகவும் என்னிடம் சொன்னார். அவரை பரிசோதித்தேன். அவருக்கு காயங்கள் எதுவும் இல்லை. அவரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்தேன். இவ்வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னிடம் விசாரணை செய்தார்கள். வெங்கட்ராமனுக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று சான்று வழங்கினேன். **(வெங்கட்ராமனின் விபத்து பதிவேட்டுடன்கூடிய காயச்சான்றிதழ் அ.த.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

3) கடந்த 26.01.2023 அன்று மதியம் 02.10 மணிக்கு நான் ஆத்தூர் அரசு மருத்துவமனையில் அவரச சிகிச்சை பிரிவில் பணியில் இருந்தபொழுது உலிபுரத்தை

சேர்ந்த பெரியசாமி (35) என்பவர் சிகிச்சைக்கு வந்தார். பெரியசாமியை விசாரித்தேன். அவர் கடந்த 26.01.2023ம் தேதி காலை 11.00 மணியளவில் நான்கு அடையாளம் தெரிந்த நபர்கள், குச்சியால் அவரது தலை, இடது கை, இடதுதோள்பட்டை ஆகிய பகுதிகளில் அடித்துவிட்டதாகவும், உடல் முழுவதும் வலி இருப்பதாகவும் என்னிடம் சொன்னார். அவரை பரிசோதித்தேன். அவருக்கு பின்வருமாறு காயங்கள் இருந்தன.

i) 4 cm அளவில் அவரது தலையில் தையல் இடப்பட்ட காயம் இருந்தது.

ii) 1x0.5 cm அளவில் அவரது வலது பக்க நெற்றியில் கிழிந்த காயம் இருந்தது.

iii) அவரது இடது கை சுண்டுவிரலில் சதை கிழிந்த நிலையில் காணப்பட்து.

மேற்படி நபரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்துக்கொண்டிருந்த நிலையில் மருத்துவமனையின் நிர்வாக ஒப்புதல் இல்லாமல் வெளியே சென்றுவிட்டதால் அவருக்கு காயச்சான்றிதழ் எதுவும் வழங்கவில்லை. <u>(பெரியசாமியின் விபத்து பதிவேடு அ.த.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது).</u>

4) கடந்த 26.01.2023 அன்று மதியம் 03.10 மணிக்கு நான் ஆத்தூர் அரசு மருத்துவமனையில் அவரச சிகிச்சை பிரிவில் பணியில் இருந்தபொழுது உலிபுரத்தை சேர்ந்த சுமதி (44) என்பவர் சிகிச்சைக்கு வந்தார். சுமதியை விசாரித்தேன். அவர் கடந்த 26.01.2023ம் தேதி காலை 11.00 மணியளவில் மூன்று அடையாளம் தெரிந்த நபர்கள், அவர்களது காலால், சுமதியை உதைத்ததாக கூறினார். முதுகில் அடிபட்டதாக சொன்னார். அவரை பரிசோதித்தேன். அவரை வெளிநோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்தேன்.

5) கடந்த 26.01.2023 அன்று மதியம் 03.15 மணிக்கு நான் ஆத்தூர் அரசு மருத்துவமனையில் அவரச சிகிச்சை பிரிவில் பணியில் இருந்தபொழுது உலிபுரத்தை சேர்ந்த செல்வராணி (45) என்பவர் சிகிச்சைக்கு வந்தார். செல்வராணியை விசாரித்தேன். அவர் கடந்த 26.01.2023ம் தேதி காலை 11.00 மணியளவில் மூன்று அடையாளம் தெரிந்த நபர்கள், குச்சியால் சுமதியின் வலது தோள்பட்டை, முதுகு, நெஞ்சு ஆகிய இடங்களில் அடித்ததாக கூறினார். அவரை வெளிநோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்தேன். இவ்வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னிடம்

விசாரணை செய்தார்கள்.

**1, 2 எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

1) பொதுவாக வலி என்பது அந்த நபரால் மட்டுமே உணரக்கூடியது என்று சொன்னால் சரிதான். ஒரு நபர் வேகமாக ஓடிவந்து கரடுமுரடான பகுதியில் உள்ள கல்லின் மீது விழுந்தால் பெரியசாமிக்கு ஏற்பட்ட காயங்கள் ஏற்பட வாய்ப்புகள் உள்ளதா என்றால் உள்ளது.

2) வெங்கட்ராமனுக்கும், சுமதிக்கும், செல்வராணிக்கும் ஏற்பட்ட வலி என்பது அந்தந்த நபர்களால் மட்டுமே உணரக்கூடியது என்று சொன்னால் சரிதான். வலி இருப்பதாக அவர்களால் பொய்யாகவும் சொல்லலாம் என்று சொன்னால் சரிதான்.

முடிவு நேரம் 11.39 A.N

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2026.02.02 17:42:34 +0530

Judicial Magistrate No.2, Attur.